பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு பாதுகாப்புச் சேவையை வழங்கல்

## ஒப்பந்த இலக்கம்: DIE/PRO/03/2024/01

01. குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்காக திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் கீழுள்ள அலுவலகத்திற்காக பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்கு தகுதியுடைய வழங்குநர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| |
|---|
| 1. தலைமை அலுவலகம் "சுஹுருபாய", ஸ்ரீ சுபுத்திபுர வீதி, பத்தரமுல்லை. |
| 2. திருகோணமலை துறைமுகத்தில் அதிகாரிகளின் ஓய்வறை |
| 3. கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் அதிகாரிகளின் ஓய்வறை |
| 4. ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் அதிகாரிகளின் ஓய்வறை |
| 5. மத்தள சர்வதேச விமானநிலையத்தில் அதிகாரிகளின் ஓய்வறை |
| 6. பிராந்திய அலுவலகம் - கண்டி |
| 7. பிராந்திய அலுவலகம் - வவுனியா |
| 8. பிராந்திய அலுவலகம் - குருநாகல் |
| 9. பிராந்திய அலுவலகம் - மாத்தறை |
| 10. மிரிஹானவில் தடுப்பு முகாம் |
| 11. யாழ்ப்பபாணம் சர்வதேச விமானநிலையத்தில் அதிகாரிகளின் அலுவலகம் |

02. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

03. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் பத்தரமுல்லை, ஸ்ரீ சுபுத்திபுர வீதி, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், 5ஆவது மாடி, 'பி', கிளை, பெறுகைப் பிரிவு, பிரதிக் கட்டுப்பாட்டாளர் (பெறுகை) இடமிருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2024.02.22 ஆம் திகதி தொடக்கம் 2024.03.13 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் அதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

04. தொடர்பு இலக்கங்கள்: தொ.: 011 2101559 தொலைநகல்: 011-2879091

05. மீளளிக்கப்படாத கட்டணமாக ஐயாயிரத்து ஐந்நூறு ரூபாவை (ரூபா 5,500.00) செலுத்தி மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை 2024.02.22 ஆம் திகதி தொடக்கம் 2024.03.13 ஆம் திகதி வரை பத்தரமுல்லை, ஸ்ரீ சுபுத்திபுர வீதி, சுஹுருபாய , குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், 5ஆவது மாடி, 'பி' கிளை, பெறுகைப் பிரிவு, பிரதிக் கட்டுப்பாட்டாளருக்கு (பெறுகை) எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை வாங்கலாம்.

06. "அசல்" மற்றும் "நகல்" என இரு பிரதிகளுடனான முழுமையான விலைமனுக்களை 2024.03.14 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, பெறுகைப் பிரிவு, 'பி' கிளை, 5ஆவது மாடி, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், சுஹுருபாய , ஸ்ரீ சுபுத்திபுர வீதி, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது கைகளால் கொண்டுவந்து சேர்த்தல் வேண்டும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் மேலுள்ள முகவரியில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது என்பதோடு திறக்கப்படாது திருப்பித் தரப்படும்.

07. விலைமனுதாரர்களால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள், விலைமனுக்களை ஏற்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட இறுதித் திகதியில் இருந்து 105 நாட்களுக்கு அல்லது எந்த ஒரு நீடிக்கப்படும் காலப்பகுதிக்கு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

08. குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளரின் பெயருக்கு அனுப்பப்படும் அனைத்து விலைமனுக்களும் விலைமனு ஆவணத்தின் பிரிவு 3.3 இல் உள்ள படிவத்தில் குறிப்பிடப்பட்டவாறு விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணையானது 2024.06.27 ஆம் திகதி வரை செல்லுபடியான ரூபா 400,000.00 தொகையை கொண்டதாகவும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

09. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு சுஹுருபாய , 5ஆவது மாடி, குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டு நாயத்தின் அலுவலகத்தில் 2024.03.05 ஆம் திகதி பி.ப. 2.00க்கு இடம்பெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம்,**
**சுஹுருபாய , ஸ்ரீ சுபுத்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**